## 47

# அறுவடை நேரம்!

## [14:14-20]

எதிர்காலம் எப்படியிருக்கும் என்று அறிந்து கொள்வதற்காக, நம்பிக்கை இழந்த மக்களால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒவ்வொரு ஆண்டும் செலவிடப்படுகின்றன. அவர்கள் தங்கள் ஜாதகங்களைக் கலந்தாய்வு செய்கின்றனர். அவர்கள் "வருங்காலத்தைப்பற்றிக் கூறுவதாக" சொல்பவர்களிடம் தொலைபேசியில் பேசுகின்றனர், மற்றும் மரித்தவர்களுடன் தொடர்பு கொள்கின்றவர்களிடத்தில் செல்லுகின்றனர். அவர்கள் அவுஜா பலகைகளின்மீது உலாவுகின்றனர். அடுத்த நாளில் மற்றும் அதற்கு அடுத்த நாளில் என்ன நடக்கும் என்பதை முன்னுரைக்கும் முயற்சியில் சிலர் அங்கொன்றும் இங்கொன்றுமான புள்ளிவிபரங்களை ஆய்வு செய்யும் வகையில் தங்கள் கனணிகளுக்குத் திட்டம் வகுத்து வைத்துள்ளனர். மிகச்சிறந்தவகையில், இந்த ஆதாரமூலங்கள் யாவும் கற்பனைகளுடன் வெளிவருகின்றன - இவற்றில் ஒருசில, கற்றறிந்த யூகங்களாக உள்ளன, இவற்றில் பெரும்பான்மையானவை முற்றிலும் நம்பகமற்ற யூகங்களாக உள்ளன. எதிர்காலம் வைத்துள்ளது என்ன என்பதை அறிகின்ற ஒரே ஒருவர் தேவன்தான் - எதிர்காலத்தைப் பற்றிய சிறு குறிப்புகளைத் தரக்கூடிய ஒரே ஒரு புத்தகம் வேதாகமம்தான்.

எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில், மனிதகுலமானது ஒரு உச்சக்காட்சி வேளையை நோக்கித் துரிதமாகச் செல்லுகிறது என்பதே வேதாகமம் நமக்குக் கூறுகிற மிக முக்கியமான விஷயமாக உள்ளது: அது, கிறிஸ்து திரும்ப வருகின்ற, மற்றும் ஒவ்வொரு நபரும் நியாயந்தீர்க்கப் படுவதற்காகத் தேவனுடைய அரியணை முன்பாக நிற்கின்ற வேளையாக உள்ளது.

> "... மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்" (மத்தேயு 25:31-33).

வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20 வசனப்பகுதியானது, இக்கட்டான அந்த வேளையைப் பற்றி, அறுவடையின் உருவகத்தில்

பேசுகிறது.[1] இதே உருவகத்தை இயேசு தமது போதனையில் பயன்படுத்தியிருந்தார்.[2] இயேசுவின் சீஷர்கள், கோதுமை மற்றும் களைகள் பற்றிய அவரது உவமைக்கு விளக்கம் கேட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார்,

> ... அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ... மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள் ... (மத்தேயு 13:39-43).

இன்னொரு சந்தர்ப்பத்தில், வளரும் விதைபற்றிய உவமையை இயேசு பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, (விவசாயி) அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான்" (மாற்கு 4:29).[3]

விவசாயம் என்பது முக்கியமான தொழிலாய் இருந்த நாட்களில், அறுவடைக்காலம் என்பது விசேஷித்த அர்த்தம் நிறைந்த விவரிப்பாக இருந்தது. நீண்ட வளர்ப்புக்காலத்திற்கு பின்பு வந்தபடியாலும், விவசாயச் செயல்முறையின் உச்சகட்டமான நிகழ்ச்சியாக இருந்தபடியாலும், அறுப்புக்காலம் என்பது சிறப்புமிக்கதாக இருந்தது.[4] நான் ஒரு பையனாக இருந்தபோது, பல்வேறு வகையான பயிர்களின் அறுவடைப் பணிகளில் நான் உதவி செய்திருக்கின்றேன். ஒரு கோடையில் நான் கோதுமை அறுவடையில் வேலை செய்திருக்கிறேன். அறுவடை என்பது ஒரு கடினமான வேலையாக, சக்தியைத் தீர்ந்துபோகச் செய்யும் வேலையாக, அழுக்கான வேலையாக உள்ளது - ஆனால் அது மன எழுச்சியைத் தரும் வேலையாகவும் உள்ளது, ஏனென்றால் அது பலமாதங்கள் முயற்சி செய்ததன் முடிவாக உள்ளது.

14:14-20ஐ நீங்கள் முதலில் வாசிக்கும்போது,

> ... இரண்டு அறுவடைகள் இருப்பதாக தோன்றுகிறது: 14:14-16, 17-20. இருப்பினும், இவைகள், ஒரே நிகழ்ச்சியின் இரண்டு பக்கங்களாக உள்ளன, இது ஒரே வேளையில் நிகழ்ந்த தரிசனத்தின் பிரிக்க முடியாத இரண்டு பாகங்களாக உள்ளன. இரண்டு விளைவுகளைக் கொண்ட ஒரு அறுவடை உள்ளது: ஒன்று புதிய எருசலேமின் குடிமக்களுக்கானது (14:14-16); மற்றும் ஒன்று வீழ்ந்துபோன பாபிலோனின் குடிமக்களுக்கானது (வசனங்கள் 17-20).[5]

G. B. கேயர்டு என்பவர், தரிசனத்தின் இவ்விரு பாகங்களையும் 14:14-20 "ஒரே ஆய்வுக்கருத்தின் மாறுதல்கள்" என்று அழைத்தார்.[6]

இவ்வசனப்பகுதியானது, மனிதகுலத்திற்கான நியாயத்தீர்ப்பின் கடைசிநாளைச் சித்தரிக்கிறதா, அல்லது ரோமப்பேரரசின் அழிவு என்பது முதன்மைக் கண்ணோட்டமாக உள்ளதா என்பது பற்றிக் கேள்வி உள்ளது.

இது கடைசி நியாயத்தீர்ப்பின் விரிவான சித்தரிப்பாக உள்ளது என்று நம்பும்படிக்கு இதன் மொழிநடை என்னை வழிநடத்துகிறது, ஆனால் எவ்வகையிலும் இது அந்தக் கடைசி நாளின் மாதிரியாகவே உள்ளது. இது நம் ஒவ்வொருவரையும், "கிறிஸ்து மறுபடியும் வரும்போது, பாதுகாக்கப் படும் கோதுமைபோல் நான் கொண்டுவரப்படுவேனா, அல்லது தேவ கோபத்தின் ஆலையில் நசுக்கப்படும் திராட்சப்பழம் போல் நான் மிதிக்கப்படுவேனா?" என்று கேட்கச் செய்ய வேண்டும்.

முதலில் நாம் இந்த அறுவடையை, கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்களின் கருத்து நோக்கில் ஆராய்வோம். பின்பு நாம் இந்த அறுவடையை, அவரை பின்பற்ற மறுத்தவர்களின் கண்ணோட்டத்தில் கண்ணோக்குவோம்.

## அறுவடை - மற்றும் மகிழ்ச்சி (14:14-16)

> பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் (a)[7] மனுஷகுமாரனுக் கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன் (வசனம் 14). ( "மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவர்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தப் புத்தகத்தின் முதல் தரிசனத்தில் (1:12-3:22), ''ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே, ... மனுஷகுமாரனுக்கொப்பானவரை" யோவான் கண்டிருந்தார் (1:13), இது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய குறிப்பாக உள்ளது.[8] இங்கு காணப்படுபவரும் இயேசு கிறிஸ்துவே என்பதில் சந்தேகம் இல்லை (யோவான் 5:27).[9]


முதல் தரிசனத்தில் இயேசு, பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக்கொண்டு இருந்தார் (1:13; 2:1); இந்தத் தரிசனத்தில், அவர் - தெய்வீகத்தின் தனிச்சிறப்புரிமையாகிய - மேகங்கள் மீது ஏறியிருந்தார் (சங்கீதம் 104:3; ஏசாயா 19:1). 1ம் அதிகாரத்தில் இயேசு, பொன்கச்சையுடன் அரச உடை தரித்திருந்தார் (1:13); இவ்விடத்தில் அவர் தமது தலையில் ஒரு பொற்கிரீடத்தைச் சூடியிருந்தார்.

மூலவசனத்தில், "பொற்கிரீடம்" என்ற சொற்றொடர் வழக்கத்திற்கு மாறானதாக இருக்கிறது, இது வெற்றியின் கிரீடத்தைக் குறிக்கும், stephanos என்ற வார்த்தையே, ''கிரீடம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சாதாரணமாக, stephanos என்பது, விலையேறப்பெற்ற உலோகத்தினுல் அல்ல, ஆனுல் உயிருள்ள ஒரு கிளையினாலேயே செய்யப்பட்டிருக்கும். இந்த உருவகத்தில், "வெற்றி மற்றும் இராஜரீகம் என்ற இரு கருத்துக்கள் ... ஒன்று கலந்துள்ளன.''[10]

இருப்பினும், முதல் தரிசனத்தில் மனுஷகுமாரன் ஒரு பட்டயத்தை வைத்திருந்தார் (1:16); இவ்விடத்தில் அவர் ஒரு அரிவாளை வைத்திருந்தார்

என்பதே மிகவும் குறிப்பிடத்தக்க நேர்மாறாக உள்ளது. அரிவாள் என்பது ஒரு சிறிய கைப்பிடியில் அரைவட்ட வடிவமான கத்தி செருகப்பட்ட ஒரு வெட்டுக் கருவியாகும்.

இப்படிப்பட்ட ஒரு கருவியானது, யோவானின் நாட்களில், தானியக்கதிர்களை அல்லது புல்லை அறுக்கப் பயன்பட்டது, இது அதே நோக்கத்திற்காக இன்றைய நாட்களிலும் சில இடங்களில் பயன்படுகிறது.[11] அதுபோலவே, மனுஷகுமாரனும், அறுவடை செய்யத் தயாரான நிலையில் அந்த அறிவாளைப் பிடித்திருந்தார். இயேசு முதல் முறை வந்தபோது, அவர் நமது இரட்சகராக வந்தார்; அவர் நமது பாவங்களுக்காக மரிக்க வந்தார். அவர் இரண்டாம் முறை வரும்போது, அவர் நமது நியாயதிபதியாக இருப்பார்.


அரிவாள்

இந்த தரிசனம், இயேசுவை அமர்ந்து காத்திருப்பவராகத் சித்தரிப்பது ஏன்? ''அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும், அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்'' என்பது ஒரு காரணமாக இருக்கலாம் (மாற்கு 13:32).

தரிசனத்தில் கிறிஸ்து நீண்ட நேரம் காத்திருக்கத் தேவையில்லாதிருந்தது. "அப்போழுது வேறொரு தூதன்[12] தேவாலயத்திலிருந்து [தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து] புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்து, அறுக்கிறதற்குக் காலம்[13] வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்'' (வசனம் 15).

''முதிர்ந்தது'' என்று மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடரானது, மூலவசனத்தில், "உலர்ந்துள்ளது" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இது நமக்கு, தானிய அறுவடை பற்றிய தரிசனத்தின் இந்த பாகத்தில் உள்ள அடையாளத்துவத்தைக் கூறுகிறது, தானியக்கதிர்கள் அறுக்கப்படுவதற்கு முன்பு, அவற்றின் தலைப்பகுதி (தானியம் உள்ள பகுதி) முற்றிலுமாக உலர வேண்டும். பொன்னிறமான கோதுமை பயிர்கள் கடல்போன்று, காற்றில் ஓய்வின்றி அசைவதை உங்கள் சிந்தையில் கண்ணோக்குங்கள்.

அறுவடைக்காக விவசாயி ஆவலுடன் காத்திருக்கையில், காலம் அசையாது நிற்பதுபோல் காணப்படுகிறது. இருப்பினும், நிறைவாக, அறுவடைக்காலம் வருகிறது (யாக்கோபு 5:7). அதுபோலவே, தேவனுடைய பிள்ளையாயிருந்து அணிவகுத்து நிற்பவருக்கு, கர்த்தர், ''தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிருப்பது'' போல் சிலவேளைகளில் காணப்படுகிறது (2 பேதுரு 3:9), ஆனால் பயம் கொள்ள வேண்டாம்: அறுவடைக்காலம் வரும்! அது இன்றைக்கே வரலாம்; அது நாளைக்கும் வரலாம்; அது இப்போதில் இருந்து பல ஆண்டுகள் கழித்தும் வரலாம் - ஆனால் அது வந்தே தீரும்!

காலம் வந்தது என்று பிதாவானவர் கூறியபோது, குமாரனானவர் தயங்கவில்லை: ''அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார்'' (வசனம் 16அ).[14] நேரடியான

அர்த்தத்தில், அவர் தமது அரிவாளைப் பூமியின்மீது "வீசினார்."[15] எனது மனதில் நான், அந்த அரிவாள் ஒரு பூமராங் போல் சுற்றி, அது ஒரு மங்கலான தோற்றம் தரும் வகையில் சுழலுவதைக் காணுகின்றேன். அது பூமியினூடே பறந்து, பூமியின் கட்டுகளில் இருந்து தானியத்தை விடுவித்தது.

''பூமியின் விளைவு அறுப்புண்டது'' (வசனம் 16ஆ). யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசு ஆகியோரால் சித்தரிக்கப்பட்டபடி, கோதுமையானது பின்பு, "களஞ்சியத்தில்" சேர்க்கப்படும் (மத்தேயு 3:12; மத்தேயு 13:30; லூக்கா 3:17ஐக் காணவும்). இவையாவும், கர்த்தர் தமது மக்களை ஒருநாளில் தம்மிடத்தில் ஒன்றுகூட்டுவார் என்று நமக்கு நினைவூட்டும் சித்திரச் சொற்றொடராக உள்ளது.

> ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெசலோனிக்கேயர் 4:16, 17).[16]

அந்த நாள் எவ்வளவு மகிமையான நாளாயிருக்கும்! இது அறுவடையின் மகிழ்ச்சியான பக்கமாக உள்ளது. "இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.' ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வசனம் 22:20)!

## அறுவடை - மற்றும் இதயவேதனை (14:17-20)

அறுவடைக்காலமானது ஒரு கவலையான பக்கத்தையும் கொண்டிருக்கும், அதையே தரிசனம் அடுத்ததாக எடுத்துரைக்கிறது: "பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான்" (வசனம் 17). அறுவடையின் இந்தப் பகுதியானது திராட்சப்பழ அறுவடையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதால், பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவுள்ள அரிவாளை அல்ல, ஆனால் செடிகளின் கிளைகளைக் கழிக்கப்பயன்படும் ஒரு சிறிய அளவான அரிவாளையே நாம் இந்தத் தூதனின் கருவியாகக் காண வேண்டியிருக்கலாம். " 'அரிவாள்' என்ற வார்த்தையானது 'கழிக்கும் கொக்கி' அல்லது 'அறுவடை செய்யும் கொக்கி' என்றும் மொழிபெயர்க்கப் பட முடியும்."[17]

''அக்கினியின்மேல் அதிகாரமுள்ள[18] வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து ..." (வசனம் 18அ). இது ஒருவேளை, பரிசுத்தவான்களின் ஜெபத்துடன் சேரும்படிப் புகையெழுப்பிய தூபத்தைப் பீடத்தின்மேல் செலுத்தியதாக 8ம் அதிகாரத்தில் நாம் சந்தித்த தூதனாக இருக்கலாம். தூபத்தைச் செலுத்தியபின்பு, அந்த தூதன், பலிபீடத்தின் நெருப்பைப் பூமியின்மீது கொட்டியிருந்தார் (8:3-5). இவரது

*செயல்கள், "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் ... எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" என்று "பலிபீடத்தின்கீழே" இருந்து கதறிய வேதசாட்சிகளாய் மரித்தவர்களுடைய கூக்குரலுக்குப் பதில்செயலாக இருந்தன என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம் (6:9, 10). 14ம் அதிகாரத்தின் முடிவில் உள்ள நிகழ்ச்சிகளை நாம் அநேகமாக, அவர்களின் கூக்குரலுக்குத் தேவனுடைய பதில் என்ற வகையிலேயே கண்ணோக்க வேண்டியிருக்கலாம்: உண்மையில் தேவன், "கடைசியில் உங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட வேண்டிய காலம் வந்தது!" என்று கூறினார்.*

*பலிபீடத்தில் இருந்து புறப்பட்டு வந்த தூதன், ''கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்" (வசனம் 18ஆ). "பழுத்திருக்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "பக்குவத்திற்கு வந்துள்ளது" என்று அர்த்தப்படுகிறது. இதே வார்த்தையை யாக்கோபு, "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று கூறும்போது பயன்படுத்தினார் (யாக்கோபு 1:15).*

*அறுவடை செய்யும்படிக்குக் கட்டளை வந்தபோது, மீண்டுமாகத் தயக்கம் இல்லாதிருந்தது. "அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து" (வசனம் 19அ). இப்பொழுது, இவ்வேளையில், அறுவடை செய்யப்பட்டவை பாதுகாப்பான இடத்தில் சேர்க்கப்படவில்லை. மாறாக, "திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்" (வசனம் 19ஆ).*

*திராட்சப்பழ ஆலை என்பது பெரிய குழிவான அமைப்பு ஒன்று, குழாய்மூலம் கீழ்த்தளத்தில் குழிவான அமைப்புடன் இணைக்கப்பட்டதாக இருந்தது. இந்தக் குழிவான அமைப்புகள் பாறையில் துளைக்கப் பட்டதாகவோ, அல்லது செங்கற்களினால் கட்டப்பட்டதாகவோ இருக்கலாம். மேலே இருக்கும் குழிவான பகுதியில் திராட்சப்பழங்கள் போடப்பட்டன, இதுவே உண்மையில் ''திராட்சப்பழ ஆலையாக'' இருந்தது. சில வேளைகளில் திராட்சப்பழங்கள், கனத்த எடையின்கீழ் நசுக்கப்பட்டன, ஆனால் இவைகள் வழக்கமாகக் கால்களைக் கொண்டு மிதிக்கப்பட்டன (ஏசாயா 63:3). இதன் விளைவாக உண்டான சாறானது[19] கீழே இருக்கும் குழிவான அமைப்பினுள் பாய்ந்தோடியது, இது "தொட்டி" என்று அழைக்கப்பட்டது (ஆகாய் 2:16).*

*திராட்சப்பழ ஆலையில் திராட்சப்பழங்கள் நசுக்கப்படுதல் என்பது, பழைய ஏற்பாட்டில், தேவனுடைய நியாயத்தின் உருவகமாகப் பயன் படுத்தப்பட்டது (ஏசாயா 63:3; புலம்பல் 1:15; யோவேல் 3:13). இந்த அடையாளத்துவமானது, துன்புறுத்தப்பட்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த அர்த்தம் கொண்டதாய் இருந்திருக்கும்: அவர்களைத் துன்புறுத் துபவர்கள், அவர்களை நசுக்கியதைப் போலவே, அவர்களை ஒடுக்கிய*

வர்களும் நசுக்கப்படுவார்கள். ஜூலியா வார்டு ஹோவ் என்ற பெண்மணி, தனது "Battle Hymn of the Republic" என்ற சிந்தனையைத் தூண்டும் புத்தகத்தில், பழைய ஏற்பாட்டு எழுத்துக்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றின் மொழிநடையில் உள்ள மணத்தை/ வாசனையைப் படம்பிடித்துக் காட்டினார்:

கர்த்தரின் வருகையின் மகிமையை - எனது
 கண்கள் எப்போதும் கண்டுள்ளன;
கோபத்தின் திராட்சைக் கனிகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன
 தொட்டியில் அவர் மிதிக்கின்றார்;
அவர் தம் அஞ்சத்தக்க வேகமான பட்டயத்தின்
 விதி முடிவுசெய்யும் வீச்சினைக் கட்டவிழ்த்துள்ளார்;
அவரது சத்தியம் அணிநடையில் முன்னேறுகிறது.[20]

"நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையில் அது மிதிக்கப்பட்டது"[21] (வசனம் 20அ). ("எகிப்தியத் திராட்சப்பழ ஆலை" என்ற விளக்க படத்தைக் காணவும்.) 19ம் அதிகாரத்தின்படி, இயேசுவே "சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" (வசனம் 15). அவர் அவ்வாறு செய்கையில், கீழே இருக்கும் குழியான அமைப்பில் பாய்ந்தோடுவது திராட்சப்பழ இரசமாக இராமல், துன்மார்க்கருடைய இரத்தமாயிருக்கும்![22]

இந்த தரிசனத்தில், இரத்தமானது ஒரு நதிபோன்று பொங்கிப்பெருகி, தொட்டியை நிறைத்து, நாடு முழுவதிலும் பரவி மேலும் மேலும் உயர்ந்தது.[23] "அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது" (வசனம் 20ஆ). இரத்தம் நான்கு அல்லது ஐந்து அடிகள் ஆழமும்,[24] நூற்றுக்கணக்கான சதுரமைல்களை மூடுவதுமாயிருந்தது!

அந்த அளவுடைய இரத்த ஏரி ஒன்றின் கருத்துடன் நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்பவர்கள் போராடுகின்றனர்.[25] சராசரி மனித உடலில் ஐந்து குவார்ட்ஸ்[26] (சுமார் 6.25 லிட்டர்) இரத்தம் உள்ளது. இது சுமார் முந்நூறு கனசதுர அங்குலங்கள் கன அளவுடையதாக உள்ளது.[27] விவரித்தலின் நோக்கத்திற்காக, இந்த நதியானது இருநூறு மைல்கள் நீளமும், ஒரு மைல் அகலமும் மற்றும் நான்கு அடிகள் ஆழமும் கொண்டது என்று நாம் உருவகிப்போம். அந்த அளவு கொண்ட இரத்த ஓடையானது சுமார் பன்னிரண்டாயிரம் கோடி மக்களின் உடல்களில் இருந்து வெளியேறும் இரத்தமாய் இருக்கும் - ஆனால் தற்போது, உலகின் மொத்த மக்கள் தொகையே சுமார் ஆறுநூறு கோடி "மட்டுமே" உள்ளது. இவ்விடத்தில் இரத்தம் நான்கு அல்லது ஐந்து அடிகள் உயரத்திற்கு "தெளித்தது" என்று கூறுவதன் மூலம் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளும் சிலர், இந்த இக்கட்டான நிலையில் இருந்து தப்பிக்க முயற்சி செய்கின்றனர், ஆனால் இவ்வசனப்பகுதி இதைக் கூறுவதில்லை, மீண்டும் ஒருமுறை நாம், அடையாளத்துவ மொழிநடையை நேரடி அர்த்தத்தில் எடுத்துக் கொள்வதின் வீணான தன்மையைக் காணுகின்றோம்.

இரத்தத்தை அளப்பதற்கு அல்ல, ஆனால் தேவனுடைய இரக்கத்தைப் புறக்கணிப்பதால் ஏற்படும் துன்பத்தின் பேரளவை வலியுறுத்தவே இந்த அடையாளத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மூலவசனத்தில், "இருநூறு மைல்கள்," என்பதற்குப் பதில் (தமிழ் வேதாகமத்தில் உள்ளதுபோல்) "ஆயிரத்தறுநூறு ஸ்தாதி[28](கள்)" என்றுள்ளது. Stadion என்பது சுமார் 607 அடிகளுக்குச்[29] சமமான ரோமானிய அளவுக்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது - ஆனால் "ஆயிரத்தறுநூறு" என்பதே திறவுகோல் சொற்றொடராக உள்ளது. ஆயிரத்தறுநூறு என்பது, மனிதகுலத்திற்கான எண்ணை ("நான்கு") அதினாலேயே பெருக்கி, அத்துடன் முழுமைத்துவத்திற்கான எண்ணை ("பத்து") அதினாலேயே பெருக்கி இவ்விரண்டையும் சேர்த்துக் கூறுதலாக உள்ளது. அறிமுகப்பாடம் ஒன்றில் நாம், "1,600" என்பது "மனிதகுலத்தின் முழுமையான தன்மை" என்பதைக் குறிப்பிடுகிறது என்று கணக்கிட்டோம்.[30]

ஆனுல் இதை எளிமையாக ஆனுல் கவலையாகக் கூறுவதென்றால், "1,600" என்பது, தண்டிக்கப்பட வேண்டியவர்களில் ஒருவர்கூடத் தண்டனைக்குத் தப்புவதில்லை என்ற கவலைக்குரிய விஷயம் உள்ளது என்பதுதான்! இராபர்ட் மவுன்ஸ் என்பவர் "தேவனுடைய நியாயத்தீர்ப்பு ... தெய்வீகப் பாதுகாப்பின் மங்கிய நிலைக்கும் அப்பால் இருக்கும் எங்குமுள்ள எல்லா மனிதர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது" என்று எழுதினார்.[31] மார்ட்டின் பிரான்ஸ்மென் என்பவர், இரத்த ஆற்றின் உருவகம் பற்றிப் பின்வரும் கூற்றைக் கூறினார்:

> ... அந்த ஓடையின் அளவானது, கடினமான மற்றும் மனம்வருந்தாத இருதயங்களின்மீது தேவன் குவித்துள்ள கோபத்தின் அதிக அளவாக உள்ளது (ரோமர் 2:5) மற்றும் அது, மிருகத்தினால் வழிநடத்தப்படும் உலகப்பிரகாரமான கலகத்தில் இணைந்துள்ள குற்றம் என்பதன் பயங்கரத்தன்மையின் அளவாகவும் உள்ளது.[32]

திகைப்பு மிகுந்த இக்காட்சியைப் பற்றி, நான் எனது மாணவர்களுக்கு விவரிக்க விரும்பினேன்: நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் அளவுக்கு உறைந்த இரத்தம், அதன் நாற்றம் மற்றும் பயங்கரம். இருப்பினும், நான், இருநூறு மைல்கள் நீளமும் நான்கு அடிகள் ஆழமும் கொண்ட இரத்த ஆறு என்று குறிப்பிடுதலே போதுமானது என்று கண்டேன்: கேட்பவர் ஒவ்வொருவரின் முகத்திலும் மருட்சி வந்தது.

பாவத்தைக் குறித்துத் தேவன் மும்முரமாக/வினயமாக இருக்கின்றார் என்று நமது சிந்தைகளில் மனப்பதிவை ஏற்படுத்துதலே, பயங்கரமான இந்தக் காட்சியின் நோக்கமாக உள்ளது. ரிச்சர்டு ரோஜர்ஸ்[33] என்பவர் யாத்திராகமத்தைப் பற்றிப் போதிக்கும்போது, "கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?" (யாத்திராகமம் 5:2) என்ற பார்வோனின் கேள்வியைக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். பிற்பாடு, ரிச்சர்டு, எகிப்தில் முதற்பேறானவர்களின் மரணத்தைப் பற்றியும் பார்வோனின் படைகள் செங்கடலில் மூழ்கியது பற்றியும் கூறுகின்றார். பின்பு அவர் தாமே, பார்வோனிடத்தில் சென்று, "அந்தக் கேள்வியை மீண்டும் கேளும்!"

என்று கூறுவதுபோல் கற்பனை செய்கின்றார்.[34] இன்றைய நாட்களில், உலகமானது "கர்த்தரின் வார்த்தைக்கு நாங்கள் கீழ்ப்படிகிறதற்கு அவர் யார்?" என்று உறுமலுடன் கேட்கிறது. ஒவ்வொரு நபரும், தேவகோபத்தின் ஆலையினுடைய கொலைக் காட்சியை நீண்ட நேரம் கண்ணோக்கட்டும் - பின்பு அந்தக் கேள்வியை மறுபடியும் கேட்கட்டும்!

## முடிவுரை

14ம் அதிகாரத்தில் உள்ள மற்ற தரிசனங்களைப் போலவே, அறுவடைக் காட்சியும் இரண்டு முதன்மை நோக்கங்களைக் கொண்டிருந்தது. முதலாவது, இது உபத்திரவப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளிக்க நோக்கங்கொண்டிருந்தது. "இந்தக் காட்சியின் திரை மூடுகையில், இந்த நிகழ்ச்சியைக் கவனித்தவர்களின் இருதயங்களில் அகமகிழ்வு இருந்திருக்கும்."[35] இரண்டாவது, அறுவடையின் தரிசனமானது, தங்கள் விசுவாசத்தைக் கைவிடும்படி சோதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டது. ஜேம்ஸ் மொஃபாட் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இறைவெளிப்பாட்டில் விளக்கியுரைக்கப்பட்ட இதுபோன்ற தீர்மானமான கருத்துக்களின் பரவுகையினால்தான், கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும், தங்கள் கண்களில் கண்ணீரோ அல்லது தங்கள் கைகளில் ஒரு பட்டயமோ இன்றி, பேரரசின் கைகளில் இருந்து தங்களின் உரிமைகோருதலின் அங்கீகாரத்தை அமுல்படுத்துவதினால் உலகத்தின் முகப்பைக் கடைசியில் மாற்றவும் முடிந்தது.[36]

இப்போது நாம் படித்த வசனப்பகுதியின் தொகுப்புரையொன்றை நீங்கள் விரும்பினால், கலாத்தியர் 6:7, 8ஐவிட மேன்மையான ஒன்றை நீங்கள் கண்டறிய மாட்டீர்கள்:

> மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ண வொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

நாளுக்கு நாள் நமது பண்புகள் - ஆறுதலுக்கோ அல்லது மோசம் போவதற்கோ, ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கோ அல்லது புறக்கணிக்கப் படுதலுக்கோ, நித்திய வாழ்விற்கோ அல்லது நித்திய மரணத்திற்கோ - முதிர்ந்து கொண்டுள்ளன. கர்த்தர் மறுபடியும் வரும்போது, நீங்கள் பாதுகாப்பிற்கான அவரது களஞ்சியத்தில் சேர்க்கப்படுவீர்களா? அல்லது தேவகோபம் என்ற ஆலையில் மிதிக்கப்படுவீர்களா?[37]

# போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்புகளில், "நியாயத்தீர்ப்பின் நிச்சயம்" மற்றும் "முடிவின் நிறைவு" என்பவை உள்ளடக்கப்படக்கூடும். "நியாயத்தீர்ப்பின் நாளான அந்த நாள் வருகிறது" என்ற பாடல் இந்தப் பாடத்தின் வலியுறுத்தத்துடன் பிணைந்துள்ளது; இந்த பாடலின் தலைப்பு இந்தப்பாடத்தின் தலைப்பாகப் பயன்படுத்தப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]*நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுவதற்கு, அறுவடையின் உருவகம் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (ஏசாயா 63:1-6; எரேமியா 51:33; புலம்பல் 1:15; ஓசியா 6:11). விசேஷமாக, யோவேல் 3:13ஐக் காணவும், இதில் வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20க்கு ஒப்பான மொழிநடை அடங்கியுள்ளது.* [2]*இயேசு சுவிசேஷ ஊழியத்தை ஊக்கப்படுத்தியபோதும் அறுவடையின் உருவகத்தைப் பயன்படுத்தினார் (மத்தேயு 9:37, 38; லூக்கா 10:2; யோவான் 4:35-38).* [3]*இதுபோலவே, யோவான் ஸ்நானனும், நியாயத்தீர்ப்புக்கு அறுவடையின் ஆய்வுக்கருத்தைப் பயன்படுத்தினார்: மத்தேயு 3:12.* [4]This sentence was adapted from Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 72. [5]M. Robert Mulholland Jr., *Revelation: Holy Living in an Unholy World,* Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 251. *14முதல் 16வரையிலான வசனங்களுக்கும் 17முதல் 20 வரையிலான வசனங்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமைத்தன்மைகளைக் காண்பிக்க - உண்மையில் இவை ஒரே அறுவடையைத்தான் குறிக்கின்றன என்று நிரூபிக்க - ஒரு வரைவட்டவணை காண்பிக்கப்பட முடியும்.* [6]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (New York: Harper & Row, 1966), 191. [7]KJV *வேதாகமத்தில்* "the Son of Man" *என்றுள்ளது. கையெழுத்துப் பிரதியின் ஆதாரம்,* "the" *என்பதற்கு மேலாக* "a" *என்பதை ஆதரிக்கிறது.* [8]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "மனுஷ குமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் காணப்படும், 1:13க்கான குறிப்புகளைக் காணவும்.* [9]NASB *வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள், இது இயேசுவிற்கான குறிப்பு என்று சிந்தித்தனர் என்பது உறுதி, ஏனென்றால் அவர்கள், 14:14-16ல்* "His," "Him," *மற்றும்* "He" *என்பவற்றில் தெய்வீகத்தைக் குறிப்பிட* NASB *வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்ட வடிவமான, பெரிய* "H"*ஐப் பயன்படுத்தினர். இவர் இயேசுவாக இருக்கின்றார் என்ற விளக்கத்திற்கு இரண்டு மறுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன: எப்போது அறுக்க வேண்டும் என்று இவரிடத்தில் தூதன் கூறினார் என்ற உண்மையும், "வேறொரு தூதன்" என்ற சொற்றொடரின் பயன்பாடும், இவ்விரு மறுப்புரைகளும் பின்வரும் குறிப்புகளில் கலந்தாய்வு செய்யப்படும்.* [10]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 279, n. 37.

[11]*சுத்தியலுக்கு மேல் அரிவாள் என்பது கம்யூனிஸ்டுகளின் அடையாளமாக*

*உள்ளது என்பதைப் பெரும்பான்மையானவர்கள் கண்டுள்ளனர். அரிவாள் விவசாயத்தைக் குறிப்பிடுகிறது; சுத்தியல் தொழிலைக் குறிப்பிடுகிறது.* [12]*6ம் வசனத்தில் ''வேறொரு தூதன்'' என்பதற்கு முக்கியத்துவம் எதுவும் இராதது போன்றே, இங்கும் "வேறொரு தூதன்" என்ற சொற்றொடருக்குத் தெளிவான முக்கியத்துவம் எதுவும் இருப்பதில்லை. "வானத்தின் மத்தியில் பிரசங்கமேடை" என்ற பாடத்திலுள்ள குறிப்புகளைக் காணவும். இந்தச் சொற்றொடரானது, ''தேவகுமாரன்'' என்று அழைக்கப்பட்டவர் தூதனாக இருந்தார் என்று நிரூபிப்பதில்லை. பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, "மனுஷ குமாரன்" என்பது இயேசுவுக்குக் குறிப்பாக இருக்கிறது. யெகோவா சாட்சிகள், "தேவகுமாரன்'' என்பவர் இயேசுவே என்று ஒப்புக்கொள்கின்றனர், ஆயினும் அவர்கள் இயேசுவை ஒரு தூதன் - அதாவது, படைக்கப்பட்டவர் - என்று ''நிரூபிக்க'' இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர். இயேசு படைக்கப்பட்டவரல்ல, ஆனுல் அவரே எல்லாவற்றையும் படைத்தவராக இருக்கின்றார் (கொலோசெயர் 1:16). 6ம் வசனத்தில் உள்ளது போலவே, 15ம் வசனத்திலும் ''வேறொரு தூதன்'' என்பது, அந்த வேளையில் தேவனுடைய இன்னொரு தூதன் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார் என்பதை மாத்திரம் சுட்டிக்காண்பிக்கிறது.* [13]*"காலம்" என்பது அப்போஸ்தலரான யோவானால் அதிகம் பயன்படுத்தப்பட்ட சொற்றொடராக உள்ளது. இது சரியான அல்லது ஏற்புடைய காலத்திற்கான குறிப்பான வேளையை அதிகமாய் குறிப்பதில்லை. ஒரு எழுத்தாளர், "தேவன் குறிப்பிட்ட காலத்திற்காக அல்ல, ஆனுல் நோக்கத்தை நிறைவேற்றவே காத்திருக்கின்றார்" என்று கூறினார்.* (Quoted in Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* [Springfield, Mo.: Gospel Publishing House, 1941], 135.) [14]*இந்த தரிசனத்தில், இயேசு தானியத்தை அறுவடை செய்கையில் தூதன் திராட்சப் பழங்களை அறுவடை செய்தார் என்ற உண்மையில், முக்கியத்துவத்தைக் காணச் சிலர் முயற்சி செய்துள்ளனர். இது ஒரு தரிசனம் மாத்திரமே என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த அடையாளத்துவம் ஏதேனும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்றால், அது, இயேசுவின் மக்களுக்கான அவரது முதன்மையான அக்கறை என்பதாக மாத்திரமே இருக்கலாம். உண்மைநிலையில், நல்லவர்கள். மற்றும் தீயவர்கள் இருசாராரையும் "ஒன்றுகூட்டிச் சேர்த்தல்" - மற்றும் நிறைவான "பலன்கள்" (அளித்தல்) - என்பதன் ஒவ்வொரு அம்சத்திலும் இயேசுவும் தூதர்களும் ஈடுபடுவார்கள் (மத்தேயு 13:41, 49; 16:27; 25:31; மாற்கு 8:38; லூக்கா 9:26; 2 தெசலோனிக்கேயர் 1:7, 8).* [15]எனது NASB வேதாகமப் பிரதியின் பக்க ஓரக் குறிப்பு ஒன்றில், "[Literally], *cast*" என்றுள்ளது. [16]*ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் ''பரவசநிலை'' என்று அழைக்கப்படும் விஷயம் பற்றிப் பேசும்போது, அவர்களால் இவ்வசனப்பகுதி பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவர்கள், பூமியின்மீது கற்பனையான ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சிக்கு முன்பாக ஏழு ஆண்டுகளுக்கு பூமிக்கு மேலாக உலாவுவதற்காக இயேசுவைச் சந்திக்கும்படிக்கு, உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று பவுல் கூறவில்லை. ஆனால், அவர், நீதிமான்களைப் பற்றிய கருத்து நோக்கில் இருந்து, மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதலையே குறிப்பிட்டார் (யோவான் 5:28, 29). "முதலாவது" என்ற வார்த்தையானது "மரித்த துன்மார்க்கருக்கு முன்பு" என்று அர்த்தப்படுவதில்லை. மாறாக "முதலாவது" என்பது சந்தர்ப்பப் பொருளில், கிறிஸ்து மறுபடி வரும்போது, ஏற்கெனவே மரித்திருக்கும் கிறிஸ்தவர்கள் உயிரோடு உள்ள கிறிஸ்தவர்களுக்கு முன்னதாக எழுப்பப்பட்டு, இயேசுவைச் சந்திக்க ஏறிச் செல்வார்கள் என்றே அர்த்தப்படுகிறது. மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்ட பின்பு, உண்மையுள்ள யாவரும் கர்த்தரைச் சந்திக்க ஒன்றுகூடிச்*

செல்லுவர். [17]Tenney, 71. [18]"அக்கினி" என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில், தேவனுடைய நியாயத்தீர்ப்புத் தொடர்பாகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. 8:5ல் இந்தத் தூதன் பூமியின்மீது அக்கினியைக் கொட்டியிருந்தார். "அக்கினியின் மேல் அதிகாரம்" என்பது, தேவன் நியாயத்தைச் செயல்படுத்த இந்தத் தூதனை ஒரு விசேஷித்த வழியில் பயன்படுத்தினார் என்று மாத்திரம் அர்த்தப்படுத்துவதாக இருக்கலாம். [19]"இந்த ஆலை, 'திராட்சப்பழ' ஆலை என்று அழைக்கப்படுவது கவனிக்கத்தக்கதாக உள்ளது. 'திராட்ச இரசம்' என்பது ஆலையில் இருந்து நேரடியாக வந்ததாக இருந்தது. திராட்சப்பழ ஆலையில் இருந்து நேரடியாக வரும் திராட்ச இரசம் போதை தருவதாக இருப்பதில்லை. எனவே 'திராட்ச இரசம்' என்பது எப்போதுமே போதை தரும் பானத்தை அர்த்தப்படுத்துவதில்லை" (Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series [Lubbock, Tex.: International Biblical Resources, 1976], 222). [20]Julia Ward Howe, "Battle Hymn of the Republic," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

[21]இவ்வசனத்தில் உள்ள "நகரம்" என்பதை அடையாளப்படுத்துவதற்கு விளக்கவுரையாளர்கள் இடர்ப்படுகின்றனர். இது ஒருவேளை சித்தரிப்பை முழுமைப்படுத்துவதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமற்ற குறிப்பாய் இருக்கலாம்; "திராட்சப்பழ ஆலைகள்" பொதுவாகவே நகரமதில்களுக்கு வெளியேதான் இருக்கும். "நகரம்" என்பதற்கு முக்கியத்துவம் ஏதேனும் இருக்குமென்றால், அது அனேகமாக, இச்சொற்றொடர், 21, 22ம் அதிகாரங்களில் (பரலோகத்திற்கு அடையாளத்துவக் குறிப்பாக உள்ள) "பரிசுத்த நகரமான எருசலேமை" குறிக்கிறது என்பதாகவே இருக்கலாம். துன்மார்க்கர் யாவரும் பரலோக வாசஸ்தலத்திற்குப் புறம்பாக்கப்பட்டனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கும் 22:15ஐக் காணவும் (21:27ஐயும் காணவும்). 14:20ல் உள்ள "நகரம்" என்பது "மகா பாபிலோன்" என்பதைக் குறிப்பிடுவதாக இருக்கவும் சாத்தியம் உள்ளது. இதில் பாபிலோன் மோசம்போக்கியவர்களை மீட்கக் கூடாதிருந்தது என்ற மறைவான கருத்தும் உள்ளது. [22]திராட்சப்பழங்களின் பல வகைகள் சிகப்பாகவோ அல்லது இரத்தாம்பர நிறத்திலோ இருப்பதால், அவற்றின் சாறானது நமக்கு இரத்தத்தை நினைவூட்டக் கூடும். இயேசு, தாம் சிந்தவிருந்த இரத்தத்தின் நினைவாக "திராட்ச இரசத்தை" பயன்படுத்தினார் (மத்தேயு 26:29). [23]பல எழுத்தாளர்கள் இதை, "அர்மகெதோன் யுத்தம்" என்று அழைக்கப்படும் நிகழ்ச்சிக்குப் பின்விளைவாகக் காணுகின்றனர், ஆனால் உருவகமானது அறுவடையில் இருந்து யுத்தத்திற்கு மாறுவதற்கான குறிப்பு எதுவும் இங்கு இருப்பதில்லை. குதிரைகளைப் பற்றிய குறிப்பிடுதல், இராணுவ முக்கியத்துவம் எதையும் கொண்டிருப்பதில்லை; இவைகள் வாசகர்களின் கண்களுக்குப் பழக்கமான காட்சிகளாய் இருந்தன, எனவே இவைகள் இரத்தத்தின் ஆழத்தைக் குறிப்பிட இவ்விதமாகப் பயன்படுத்தப்பட்டன. [24]கடிவாளம் என்பது குதிரையின் தலையைச் சுற்றி வளைத்து இடப்படும் பூண் போன்றதாக இருக்கிறது; பெரும்பாலான குதிரைகளின் தலைகள், தரைக்கு மேல் அநேக அடிகள் உயர்ந்திருந்தன. [25]சொல்லர்த்தமாய் எடுத்துக்கொள்பவர்கள் (ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள்), 1,600 ஸ்தாதிகள் என்பது ஏறக்குறையப் பலஸ்தீனத்தின் நீளத்திற்குச் சமமானது என்று குறிப்பிட விரும்புகின்றனர், ஆனால் அவர்கள், இந்தத் தரிசனத்தில் காணப்படும் எஞ்சிய அளவீடுகள் குறித்து இடர்பாடு கொள்கின்றனர். [26]இந்த அளவீடு, அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் குவார்ட்ஸ் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. [27]திரவங்களுக்கான அமெரிக்க குவார்ட்ஸ் என்பது 57.75 கனசதுர அங்குலங்கள் என்ற அளவுடையதாகும். [28]NIV வேதாகமத்தில் "stadia" என்றுள்ளது. வேதாகமத்தில்

உள்ள "two hundred miles" (*"இருநூறு மைல்கள்"*) *என்ற சொல்விளக்கமானது, இந்தக் கிரேக்கச் சொற்றொடரை இன்றைய நாட்களின் வாசகர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலான சொற்றொடர்களில் இடுவதற்கான ஒரு முயற்சியாக உள்ளது என்பது உறுதி - ஆனால் இது, பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட அடையாளத் துவத்தை அழிக்கிறது.* KJV *வேதாகமத்தில்* "a thousand and six hundred furlongs" *என்றுள்ளது. (ஆங்கில* "furlong" *என்பது ஏறக்குறைய 660 அடிகள் தூரமுடையது, எனவே இந்த அளவீடு ஸ்தாதி என்பதற்குச் சமமானதாக உள்ளது.) Stadia என்பது stadion என்பதன் பன்மைச் சொல்லாக உள்ளது.* [29]*ஆயிரத்து அறுநூற்று ஸ்தாதிகள் என்பது ஏறக்குறைய 184 மைல்களாக இருக்கும்.* [30]*"நான்கு," "பத்து," மற்றும் "1,600" என்பவற்றின் அடையாளத்துவ தனிச்சிறப்பிற்கு "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் காணவும்.*

[31]Mounce, 283. [32]Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1976), 104. [33]*ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர் ஒரு சுவிசேஷப் பிரசங்கியார், போதகர் மற்றும் கல்வியாளர் ஆவார்.* [34]This illustration was used by John Risse, "Evil Beasts and the Victorious Lamb," Sermon preached at the Southern Hills church of Christ, Abilene, Texas, 5 May 1991. [35]This sentence was adapted from Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 183. [36]James Moffatt, *Expositor's Greek New Testament*, vol. 5 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.), 313. [37]*இந்தப்பாடம் ஒரு பிரசங்கமாக பயன்படுத்தப்பட்டால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் தங்கள் ஆத்துமாக்களின் தேவைகள் பற்றி - உடனடியாக - கவனம் செலுத்தும்படி உற்சாகப்படுத்துங்கள். மக்களுக்கு அவர்களின் பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்று நீங்கள் கூற விரும்புவீர்கள். அவர்கள் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் கர்த்தரால் அவரது சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்று கூறும் நடபடிகள் 2ஐ நினைவுபடுத்துங்கள் (வசனங்கள் 38, 41, 47). சபை என்பது மீட்கப்பட்டவர்களைக் கொண்ட சரீரமாக இருப்பதால், அவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுதல் என்பது ஒருவரின் பெயர் மீட்கப்பட்டவர்களின் பட்டியலில் கூட்டப்படுதல் என்பதாக உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களில் சிலர், ஒருகாலத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்து, இப்போது உண்மையற்றவர்களாய் இருந்தால், ஒருவரின் பெயரானது அந்தப்புத்தகத்தில் இருந்து நீக்கப்படக்கூடும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 3:5; யாத்திராகமம் 32:32), மற்றும் அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (நடபடிகள் 8:22, 23; யாக்கோபு 5:16).*

---


## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்க, அறுவடையின் உருவகம் ஏற்புடையதாக இருப்பது ஏன்?*
2. *வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20ல், எத்தனை கடைசி "அறுவடைகள்" உள்ளன?*
3. *14ம் வசனத்தில் சித்தரிக்கப்படும் "மனுஷகுமாரன்" யார்?*

4. அவர் அமர்ந்திருக்கும் மேகத்தின் தனிச்சிறப்பு என்ன? அவர் அணிந்திருக்கும் கிரீடத்தின் தனிச்சிறப்பு என்ன? அவர் பிடித்திருக்கும் கருவியின் தனிச்சிறப்பு என்ன?
5. இந்த அறுவடையின் முதல் பகுதி, தானிய அறுவடையாக உள்ளது என்று இந்தப் பாடம் கருத்துத் தெரிவிப்பது ஏன்?
6. தானிய/கோதுமை அறுவடையானது எந்தக் குழுவைச் சேர்ந்த மக்களுக்கானது?
7. வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த திராட்சப்பழ ஆலையைப் பற்றி விவரிக்கவும்.
8. 19ம் அதிகாரத்தின்படி, தேவகோபத்தின் ஆலையை மிதிப்பது யார்?
9. திராட்சப்பழங்கள் மிதிக்கப்பட்டபோது, திராட்சப்பழ ஆலையில் இருந்து பாய்ந்தோடியது எது? 20ம் வசனத்தின் உருவகத்தை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமா? ஏன்?
10. 1,600 ஸ்தாதிகள் நீளமான இரத்த ஏரியின் அடையாளத்துவ முக்கியத்துவம் என்ன?
11. இந்த அடையாளத்துவமானது, “பாவத்தைக் குறித்துத் தேவன் மும்முரமாக/வினயமாக இருக்கின்றார்” என்பதை எவ்வாறு நிலைநாட்டுகிறது?
12. சுய - பரிசோதனைக்கு: கர்த்தருடைய மறுவருகைக்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா?



**மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவர் *(14:14)***



எகிப்தியத் திராட்சப்பழ ஆலை (14:20)